வரலாற்றில் அத்தி

அ. லோகேஷ் குமார்

திருவண்ணாமலை மாவட்ட வரலாற்று
ஆய்வு நடுவம்

மின்னஞ்சல்- tvmchr@gmail.com web:www.yaadhumooray.com

முன்னுரை

திருவண்ணாமலை மாவட்ட வரலாற்று ஆய்வு நடுவத்தின் ஊர்வரலாறு திட்டத்தின் கீழ் செய்யாறு வட்டம் அத்தி கிராமத்தின் ஊர் வரலாறு நூல் வெளியிடப்படுகிறது. இந்நூலை செய்யாறு வசிக்கும் திரு. அ.லோகேஷ்குமார் அவர்களின் ஆர்வத்தினாலும் முனைப்பான செயல்பாடுகளினாலும் சாத்தியமானது. அத்தி என்ற சிறு கிராமத்தின் வரலாறு, கோயில்கள், கல்வெட்டுகள் என அனைத்தையும் உள்ளடக்கிய ஒரு நூலாக வெளிவந்துள்ளது. ஊர் வரலாறு நூல் வெளியீட்டுத் திட்டத்தில் இவ்வளவு சிறிய ஊருக்கும் வரலாறு எழுதமுடியும் என்பதே இந்த திட்டத்தின் சிறப்பாகும். இந்த நூல் எழுதிய வரலாற்று ஆய்வாளர் திரு. அ.லோகேஷ்குமார் அவர்களுக்கு திருவண்ணாமலை மாவட்ட வரலாற்று ஆய்வு நடுவத்தின் சார்பாக பாராட்டுகளை தெரிவித்துக்கொள்கிறோம்

இவண்,
ச.பாலமுருகன்
செயலர்,
திருவண்ணாமலை மாவட்ட வரலாற்று ஆய்வு நடுவம்

விலை - ரூ. 50/-

1. அமைவிடம்

அத்தி கிராமமானது திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு வட்டம் அனக்காவூர் ஊராட்சி ஒன்றியத்தில் அமைந்துள்ளது. இந்த கிராமம் காஞ்சிபுரம் - வந்தவாசி மாநில நெடுஞ்சாலையில் பெருநகர் கிராம சந்திப்பிலிருந்து 8 கி.மீ தொலைவிலும் ,செய்யாறில் இருந்து காழியூர் பெருநகர் - உத்திரமேரூர் வழியாக செல்லும் சாலையில் 10கி.மீதொலைவில் அமையப்பெற்றுள்ளது. இந்த கிராமத்தின் மேற்கு திசையில் செய்யாறு பாய்ந்து வடக்கு திசை நோக்கிப்பின் கிழக்கு நோக்கி செல்கின்றது. மேற்குத் திசையில் செய்யாற்றின் வெள்ளநீர் ஊருக்குள் புகுவதை தடுக்க ஆற்றின் கரையில் இயற்கை அரணாக மலையும் குறுங்காடுகளும் அமைந்துள்ளன.

2. போக்குவரத்து

செய்யாறில் இருந்து செங்கல்பட்டு சென்னை வழியாக அரசுப் பேருந்து அத்தி கிராமத்தின் வழியே கடந்த ஆண்டு (2019) வரையில் இயக்கப்பட்டு வந்தது. பின்னர் உத்திரமேரூர் வரை தற்போது இயக்கப்படுகின்றது. காஞ்சிபுரத்தில் இருந்து பெருநகர் வழியாக அத்தி கிராமத்திற்கு நகரப்பேருந்து இயக்கப்படுகின்றது. இரயில் போக்குவரத்திற்காக அத்தி கிராமத்தில் இருந்து 32 கி.மீ தொலைவில் உள்ள காஞ்சிபுரம் ரயில் நிலையத்தில் இருந்து செங்கல்பட்டு ,சென்னை, அரக்கோணம் மற்றும் பாண்டிச்சேரி போன்ற நகரங்களுக்கு செல்ல காஞ்சிபுரம் ரயில்வே சந்திப்பு உள்ளது. மேலும் அத்தி கிராமத்திலிருந்து தென் தமிழக மாவட்டங்களையும் பிற அண்டை மாநிலங்களை இணைக்கும் செங்கல்பட்டு ரயில்வே சந்திப்பு 48 கி.மீ தொலைவில் உள்ளது. விமான போக்குவரத்திற்கு 90 கி.மீ தொலைவில் மீனம்பாக்கம் பன்னாட்டு விமான நிலையம் உள்ளது.

3. ஊர் பெயர்க்காரணம்

அத்தி என்னும் சொல்லிற்கு அத்தி மரம், யானை என்று பல்வேறு பொருள்கள் உள்ளது. இந்த கிராமத்தில் உள்ள பழம் பெருமை வாய்ந்த சிவாலயம் அகத்திய முனிவரால் பூசித்ததாக கருதப்படுகிறது. எனவே அக்காலத்தில் இவ்வூரை அகத்தீசுவரம் என்று வழங்கப்படிருந்தமை அறியவருகிறது. கல்வெட்டுகளில் 'கேரளாந்தக நல்லூர்' என்று வழங்கபடுகின்றது. கேரளாந்தகன் என்பது இராஜராஜசோழனின் விருதுப்பெயர்களுள் ஒன்று. விஜய நகர மன்னர்களின் கல்வெட்டுகளில் அத்தி, கிருஷ்ணதேவராயபுரம் என்று வழங்கப்பட்டுவருகின்றது. மற்றொரு கல்வெட்டில் வெண்குன்ற கோட்டத்து அத்தி எதிரிலிச்சோழ விண்ணகரம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எதிரிலி என்பதும் இராஜராஜசோழனின் விருதுப்பெயர்களுள் ஒன்றாகும். இதனடிப்படியில் அத்தி கிராமத்தை சோழர்கள், சம்புவரையர், விஜயநகர மன்னர்கள் ஆட்சிகளில் சிறப்புற்று விளங்கியிருப்பதை உணர்த்துகின்றது. அகத்தீசுவரம் எனும் பெயரே அகத்தி அத்தி என்று மருவியுள்ளது. திருவோத்தூர் கல்வெட்டுகளில் அத்திப்பற்று நாட்டவர் என்ற சொல்லும் வழங்கப்பட்டு வருகிறது . பற்று என்றால் நிர்வாக பிரிவு என்பதாகும். எனவே சோழர் காலத்தில் அத்தி கிராமம் நாடு என்ற ஓர் நிர்வாக பிரிவாகவும் , இருந்தமையை அறிகின்றோம்.

4.பொதுத்தகவல்கள்

2011 மக்கள்தொகை கணக்கெடுப்பின் படி அத்தி கிராமத்தில் மொத்தம் 796 பேர் வசிக்கின்றனர். இவற்றில் ஆண்கள் 425 மற்றும் பெண்கள் 371. கல்வியறிவு அடைந்தோர் 85.41% ஆகும். அரசு பள்ளிகளாக ஊராட்சி ஒன்றிய ஆரம்ப பள்ளி உள்ளது. அரசு அலுவலகங்களாக ஊராட்சி மன்ற அலுவலகம், கிராம நிர்வாக அலுவலர் கட்டிடம், நியாய விலைக் கட்டிடம், கிராம பொது சேவை மையம், நூலக கட்டிடம் போன்றவை உள்ளன.

5. ஊராட்சி

செய்யாறு வட்டம் அனக்காவூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட அத்தி கிராமத்தில் 4 வார்டுகள் உள்ளன. இவ்வூர் வாக்காளர்களால் 1996 முதல் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி மன்றத் தலைவர்கள் பட்டியல் .

1. 1996 கு. ரங்கசாமி
2. 2001 ஆ.செல்வராஜ் .
3. 2006 எ.முருகசாமி
4. 2011 து.துரை அப்பு
5. 2019. வி.மீனாகலையரசி

இவ்வூரில் உள்ள முக்கிய அரசு மற்றும் தனியார் கட்டடங்கள் -

1. அங்கன்வாடி கட்டிடம்
2. பள்ளி 1
3. ஊராட்சி மன்ற அலுவலகம்
4. கிராம நிர்வாக அலுவலகம்
5. பயணியர் நிழற்குடை 2
6. செய்யாறு கூட்டு குடிநீர்நீரேற்று நிலையம்
7. குடிநீர் தேக்கம் 3
8. நூலகம்
9. பொது சேவை மையம்
10. நியாய விலைக் கடை
11. கிராம வறுமை ஒழிப்பு சங்கம்
12. மகளிர் சுய உதவி குழு கட்டிடம்
13. ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகம்

6. இயற்கையமைப்பு

அத்தி கிராமத்தில் ஆறு, காடு, சிறு மலைத்தொடர் என இயற்கைச் சூழல் மிகுந்து இந்த ஊருக்கு அணியாக அமைந்துள்ளது. அத்தி கிராமத்தின் மேற்குத் திசையில் செய்யாறு ஆறு வடக்குத்திசை நோக்கி சென்றுப் பின் கிழக்கு திசையை நோக்கி பாய்ந்துசெல்கின்றது. ஆற்றில் வெள்ளம் வரும்போது வெள்ள நீர் ஊருக்குள் புகுவதை தடுக்க இயற்கை அரணாக மலைத்தொடர் மற்றும் குறுங்காடுகளும் ஆற்றங்கரையில் அமைந்துள்ளது. மலைத்தொடர் காடுகளில் முயல், மான்கள், மயில்கள் போன்ற உயிரினங்கள் வாழ்ந்து வருவதன் மூலம் பல்லுயிர் வசிப்பிடமாக உள்ளது.

7.நீர்நிலைகள்

சவ்வாது மலையில் உற்பத்தியாகி வருகின்ற செய்யாறு ஆறு அத்தி கிராமத்தின் வழியாக பாய்ந்து நீர்வளத்தை மேம்படுத்தி பல்வேறு உயிரினங்களுக்கு வாழ வழிவகை செய்கின்றது. இந்த கிராமத்தில் பெரிய ஏரி மற்றும் சிறிய ஏரி என இரண்டு ஏரிகள் உள்ளன. இரு ஏரிகளுக்கும் மலைத்தொடரில் இருந்து வரும் மழைநீரும், செய்யாறு ஆற்று நீரும் முக்கிய நீர் வரத்து வாய்க்கால்களாக உள்ளன. மேலும் அனப்பத்தூர், வடாளபிறந்தான் கிராம ஏரிகளிலிருந்து வரும் உபரி நீர் அத்தி ஏரிக்கு நீரைத்தரும் ஒரு காரணியாக உள்ளது. அத்தி ஏரிகளில் நீர் நிறைந்து வெளியேறும் நீரானது கீழ்நீர்குன்றம் மற்றும் பெருநகர் கிராம ஏரிகளுக்கு செல்லும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. நீர் மேலாண்மையில் நீரை தேக்கி வைப்பதற்காக முன்று குளங்கள் உள்ளன அவை முறையே மத்திமாங்குளம், பிள்ளையார் குட்டை, பாப்பான் குளம் ஆகியவை பொதுமக்கள் மற்றும் விவசாயத் தேவைக்காக பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

8.கோவில்கள்

1.அருள்மிகு அகத்தீஸ்வரர் திருக்கோயில்

அத்தி கிராமத்தின் மையத்தில் அமைந்துள்ள அகத்தீஸ்வரர் கோயில் ஒரு கற்றளிக் கோயிலாகும். இதன் காலம் 12 ஆம் நூற்றாண்டு ஆகும். எளிமையான அமைப்பு கொண்ட இக்கோபுரம் கருவறை, அந்தராளம், முக மண்டபம் அமைந்துள்ளது. இதைச் சுற்றியுள்ள திருச்சுற்றில் பரிவார தெய்வங்களாக விநாயகர், வள்ளி தெய்வானையுடன் ஆறுமுகப்பெருமான், தென்முகக் கடவுள், நான்முகன், திருமால், கொற்றவை, சண்டீசன், பைரவர், நந்தியம்பெருமான், நவக்கோள், சூரியன் ஆகியோர் உள்ளனர். கோயிலுக்கு வெளியே கருவறை விமானத்தின் கீழே மகரம், தேவதூதர்கள் போன்ற சிற்பங்கள் உள்ளன.

கோவிலின் முன்பு மண்டபம் அமைந்துள்ளது. இது தற்போது முற்றிலும் சிதைவடைந்து ஒரு பக்க பகுதி மட்டும் உள்ளது இம்மண்டபத்தின் அருகே கிருஷ்ணதேவராயர் கால கல்வெட்டு உள்ளது.

அகத்தீஸ்வரர் கோயில் விமானம்

அகத்தீஸ்வரர் கோயில் மண்டபம்

கோயில் சிற்பக்கலை

கருவறை லிங்கம் புதியது. பரிவார தெய்வங்கள் விநாயகர், வள்ளி தெய்வானையுடன் ஆறுமுகப்பெருமாள் , தென்முகக்கடவுள்,பிரம்மா ,திருமால்,கொற்றவை ,சண்டீசன் , பைரவர்,நந்தியம்பெருமான் , சூரியன் ஆகியோர் உள்ளனர். இதில் பிரம்மா மட்டுமே பழைய சிற்பம்.

பழைய சோழர் காலத்திய அழகிய தட்சிணாமூர்த்தி மற்றும் சூரியன் சிற்பம் உடைந்த சிற்பம் அங்கே உள்ளது. முன்னுள்ள மஹாமண்டபத்தில் ஒரு சதுர ஆவுடை லிங்கமும், ஒரு விநாயகரும் உள்ளனர், வெளியே மதில் அருகே ஒரு விநாயகர் சிற்பமும் உள்ளது. கிருஷ்ணதேவ மகாராயரால் கட்டப்பட்ட மண்டபம் முழுவதும் சிதிலமடைந்துள்ளது.

கோயிலமைப்பு

பாதபந்த அதிஷ்டானத்துடன், வேதிகை கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. பித்தியில் கருவறை, அர்த்த மண்டபத்தில் தேவ கோஷ்டங்கள், பத்ர,மகர தோரணத்தோடு, காடப் பகுதியில் குருஞ்சிற்பங்கள் அமைக்கப்பட்டு உள்ளது. தூண்கள் சிவசந்தமாகவும், அமலகம், நாக தல மண்டி கொண்டு, ஒர தூண்கள் இரண்டாக விரி பொதிகை கொண்டும் உள்ளது,வலபியில் வழக்கமாக இருக்கும் பூத வரிக்கு பதில் ஊர்த்துவ பத்ம வரியும், பிரஸ்தரத்தின் கபோதத்தில் நாசிக்கூடுகளும் அதில் இறை, கந்தர்வ உருவங்களும் செதுக்கப்பட்டு, ஓரங்களில் கருக்குகள் கொடுக்கப்பட்டுள்ளன. வ்யாள வரி அமைந்துள்ளது.

இக்கோயிலின் விமானம் ஏகதளத்துடன் சுதையாலானது. இது பிற்கால சேர்க்கையாக இருக்கலாம், ஏனெனில் இக்கோயில் இரண்டு அல்லது மூன்று தள விமானமாக அமைக்கப்படுவதற்கான கல்காரமாய் தான் அமைந்து பத்திகள் பிரிக்கப்பட்டுள்ளது. சாவகாச அந்தராளம் இருக்கும் பகுதியில் ஒற்றைக் கால் பஞ்சரம் நாகர சிகரத்தோடு அமைக்கப்பட்டுள்ளது. சுவற்றின் ஓரங்களில் வரும் தூண்கள் இரண்டு சேர்ந்தார் போல் அமைக்கப்பட்டுள்ளது தனி சிறப்பு. சுவற்றின் ஜலகம் நந்தியாவட்டையாக அமைக்கப்பட்டுள்ளது. மண்டபத்தில் உள்ளே உள்ள தூண்கள் மிக நேர்த்தியாக வடிவமைக்கப் பட்டுள்ளது.

பிரம்மா



2. அருள்மிகு கரியமாணிக்கப் பெருமாள் திருக்கோயில்

இதுவும் கற்றறிக்கோயில் ஆகும். இதன் கருவறை, மண்டபம் திருச்சுற்று என்ற எளிய அமைப்பு கொண்டது. இதன் காலம் சுமார் 15 ஆம் நூற்றாண்டு ஆகலாம். இக்கோயில் சிதிலமடைந்திருந்தை அவ்வூர் மக்களால் சீர் செய்து குடமுழுக்கு 4/7/2019 அன்று நடைபெற்றுள்ளது. தற்போது இக்கோயிலில பெருந்தேவி தாயார், ஸ்ரீ யோக நரசிம்மர் ஸ்ரீ சக்கரத்தாழ்வார், ஸ்ரீபக்த ஆஞ்சநேயர், ஸ்ரீ கருடாழ்வார் சன்னிதிகள், ஐந்து கலசங்கள் கொண்ட புண்யகோடி விமானமும் பெருமாள் சந்நிதிகளும் உட்புறத்தில் ஸ்ரீஸ்ரீநிவாசர் மற்றும் ஆசார்யர்களான ஸ்ரீஇராமானுஜர் துவாரபாலகர் ஆகியோரும் பிரதிஷ்டை செய்யப்பட்டு அமைக்கப்பட்டுள்ள.

3. அருள்மிகு பாலமுருகன் திருக்கோவில்.

இந்த ஆலயம் மலை மீது இருந்த முருகன் கோவிலில் சிதிலமடைந்த பின் அகத்தீஸ்வரர் கோவில் பின்புறமுள்ள பகுதியில் கட்டப்பட்டுள்ளது. அருள்மிகு முருகப்பெருமான் வள்ளி தெய்வானையுடன் காட்சி அளிக்கிறார். விநாயகர் சபரிமலை ஐயப்பன் போன்ற தெய்வங்கள் உள்ளன.

9. கல்வெட்டுகள்

கல்வெட்டுகள் அமைவிடம்

இவ்வூரில் உள்ள அகத்தீஸ்வரர் கோயிலில் 6 கல்வெட்டுகளும் கரியமாணிக்கப் பெருமாள் கோயிலில் 3 கல்வெட்டுகளும் ஆக மொத்தம் 9 கல்வெட்டுகள் உள்ளன. இக்கல்வெட்டுகளில் காலத்தால் முந்தைய கல்வெட்டு இரண்டாம் இராஜாதிராஜனின் 10 ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டாகும். இக்கல்வெட்டுகள் அனைத்தும் தென்னிந்திய கல்வெட்டு மடலம் 38 இல் இடம் பெற்றுள்ளது. இவ்வூர் கல்வெட்டுகளின் சிறப்புத்தன்மையெ குறிப்பிடுவது ஒரு சிறிய ஊராகிலும் பல மன்னர்கள் தானம் அளித்த செய்தியும் அதிலும் தெலுங்கு சோழர்கள் கல்வெட்டும் காடவராயர் கோப்பெருஞ்சிங்கன் பாடல் கல்வெட்டும் குறிப்பிடத்தக்கனவாகும்.

கல்வெட்டு எண் 1

1.	அரசு	சோழர்
2.	அரசன்	இரண்டாம் இராஜாதிராஜன்
3.	ஆட்சியாண்டு	10
4.	வரலாற்று ஆண்டு	பொ.ஆ. 1174
5.	இ.க.ஆண்டறிக்கை	297/1912
6.	முன்பதிப்பு	தெ.இ.க. மடலம் 38. பக்கம் 346.
7.	இடம்	அகத்தீஸ்வரர் கோயில் தெற்கு சுவர்.

8. குறிப்புரை - அத்தி (எ) கேரளாந்தகநல்லூரில் திருவகத்திஸ்வரமுடையார்க்கு சோழநாட்டு பனங்குடையான் என்பவர் இந்த கோயிலுக்கு பால்பசு 12, சினைபசு 10,பொலி காளை 10, ரிஷபம் ஒன்று ஆக 33 னையும் நந்தா விளக்கு எரிக்க தானம் விடப்பட்ட செய்தியாகும்.

கல்வெட்டுப் பாடம்

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச்சக்கரவர்த்திகள் ஸ்ரீராஜாதிராஜ தேவர்கக்கு யாண்டு10 வது ஐயங்கொண்ட சோழமண்டலத்து வெண்குன்றக் கோட்டத்து பெருநகர்நாட்டு அத்தியான கேரளளாந்தகநல்லூரில் ஆளுடையார் திருவகத்திஸ்வரமுடையார்க்கு
2. சோழமண்டலத்து உய்யக் கொண்டார் வளநாட்டுப் பனங்குடியில் பனங்குடையான் நிறணிந்தானான சேதராயன் இன்னாயநாற்கு திருநுந்தாவிளக்கு ஒன்றுக்கு விட்ட பால்பசு 12 ம் சினை பசு 10 ம் பொலிமுறை நாகு 10 ம் இஷபம் ஒன்று ஆக
3. இந்த முப்பத்துமுன்றும் இக்கோயிலில் காணியுடைய ஸிவபிராமணனன் காஸிபன் விடங்கபட்டன் ஆட்கொண்ட பிள்ளையும் இவன் தம்பி கூத்தநும் உபையங் கைக்கொண்டு இத்திருநந்தாவிளக்கு சந்திராதித்தவரை செலுத்தக்கடவோமா
4. க இப்படி ஸம்மதித்து இப்பசுவம் வருஷபமுங் கைக்கொண்டோம் இவ்விருவோம் இப்படிக்கு இவை விடங்கபட்டன் ஆட்கொண்டபிள்ளை எழுத்து இப்படிக்கு இவை விடங்கபட்டன் கூத்தன் எழுத்து.

கல்வெட்டு எண் : 2

1.	அரசு	: விஜயநகர பேரரசு
2.	அரசன்	: கிருஷ்ணதேவராயர்
3.	ஆட்சியாண்டு	10
4.	வரலாற்று ஆண்டு	பொ.ஆ. 1526
5.	இ.க.ஆண்டறிக்கை	299/1912
6.	முன்பதிப்பு	தெ.இ.க மடலம் 38. பக்கம் 348
7.	இடம்	அகத்தீஸ்வரர் கோயில் வடக்கு சுவர்.

8. குறிப்புரை - கிருஷ்ணதேவராயரின் 10 வது ஆட்சிக்காலத்தில் சோழீஸ்வரமுடைய நாயனார் கோயில் பண்டராத்து கங்காணி ஆண்டார் படைவீட்டில் இருக்கும் துவாரபதி உடையார் மகனுக்கு சர்வமானியமாக விட்ட நிலம் குழி 1500 விடப்பட்ட செய்தி.

கல்வெட்டுப் பாடம்

1. ஸ்வஸ்திஸ்ரீ மஹாமண்டேஸ்வர மேதினி மிசுர கண்ட கட்டாரி எம்மண்டலமும்
கொண்டருளிய இராசாதிராச ராசபரமேஸ்வசுரந் பாஷைக்கு தப்புவராயர் கண்டன்
முவராயர் கண்மடன கண்ட நாடு கொண்டு கொண்ட நாடு கூடாதான் பூர்வபச்சிம
தெக்ஷண உத்திரசமுத்றாதிபதி ஸ்ரீவீரபிரதாப கிருஷ்ணதேவராயர்
பிருதிவிராஜ்யம் பண்ணியருளா நின்ற சகாதம் 1448 மேல் செல்லா நின்ற
பாசித்பசம் வெற்சரத்து மினநாயற்று அபரபக்ஷத்துதிருதியையும்
பிரஹஸ்பதிவாரமும் பெற்ற சித்தரா நட்சத்திரத்து செயங்கொண்ட
2. சோழ மண்டலத்து பல்குன்றக் கோட்டத்து மருதரசர் படைவீடு ராஜகம்பீரன் மலை
கடைத்த பற்று அத்தி பற்றில் மேற்படி ஊரில் உடையார் எதிரில் சோழ சுரம்
உடைய நாயனார் கோயில் பண்டாரத்து கடவதான ....
3 இம்ம்மாடபத்தியம் கங்காணி ஆணை ஆண்டார்க்கும் எம்மில் இசைந்து படை
வீட்டில் இருக்கும் துவாரபதி உடையார் மகன் சோழீஸ்வரமுடையார் நயினார்
கோயில் கடவுளான கங்காணி ஆண்டவருடன் கூடி மெய் வருந்தி திரவியம்
இணைந்து சறுவ
4 மானிய பண்ணிகுடுக்கையில் நாங்கள் இவருக்குப் பண்ணி கொடுத்த காட்சி இந்த
கோயிலுக்கு கோயில் கணக்கெடுத்து ஒரு சம்பிரதி சொலீஸ்வரம் உடையார்க்கு
காணியாட்சி பண்ணி கொடுத்தோம் கோயிலுக்கு வரும் சகல ஆதாயமும் எச்சம்
உண்டானதும் கண்டு இவரே கோயில் கணக்கும் சந்திராதித்தவரை உள்ளவும்
எழுதிவர கடவராக கோயில் கணக்கு எழுதுமிடத்து சிவிதத்துக்கு யிந்நாயனார்
தேவதான ஆன அத்திமலஏரி
5 கீழ் முதல் மடை பாச்சல் கவுண்டன் தம் பற்றில் விட்ட நஞ்சை குழி 50
புஞ்சையில் ஆற்றங்கரையிலே எல்லை ஆசறுதிக்கு மேற்கு பெருமாள்
திருவிளையாட்டத்துக்கு கிழக்கு குழி 60 மலையடியில் கொல்லை குழி 60 ஆக குழி
1500 வடக்கு தெருவில் மனை ஒன்றும் மனை புழக்கடையும் குழி 1500 தங்கள்
கைப்பற்றாக தங்களிட ஏரியிட்டு அனுபவித்து கொள்ள கடவாராகவு கொயில்
ஒடுக்கு பிறசாதம் மற்றும் பெறும் சவந்திரமும் எங்கள் மதிகாரிபற்றக் கொண்டு
6 வரக்கடவராகவு பிப்படி சம்மதித்து காணிஆட்சி பண்ணிகுடுத்தோம்
சோளிசுரமுடையாற்கு கோயில் தானத்தார்.... மாடாபத்தியம் கங்காணி
ஆண்டாரும்.....உ
7 .....உ மாடாபத்தியம் கங்காணி ஆண்டார் எழுத்து உ.

கல்வெட்டு எண் 3

1. அரசு விஜயநகரம்
2. அரசன் கிருஷ்ண தேவராயர்
3. ஆட்சியாண்டு 10
4. வரலாற்று ஆண்டு சகம் 1448 பொ.ஆ. 1526
5. இ.க.ஆண்டறிக்கை 299/1912
6. முன்பதிப்பு தெ.க.மடலம் 38. பக்கம் 348
7. இடம் அகத்தீஸ்வரர் கோயில் வடக்கு சுவர்.
8. குறிப்புரை -

கல்வெட்டுப் பாடம்

1. சுபமஸ்து ஸ்வஸ்திஸ்ரீ மகாமண்டலேசுவரர் ஹரியராயவிபாடன் பாஷைக்கு தப்புவராயிரகண்டன் முவராயிர கண்டன் கண்ட நாடு கொண்டு கொண்ட நாடு குடாதான் யிந்து ராய சுத்தாணன் துலுக்க தளவிபாடன் துலுக்கமொகரந்தவுத்தான் யிராசாதிராசன் யிராச பரமேசுரன் பூறுவ தெக்ஷண பச்சிம உத்திரசத்த சமுத்திராதிபதி எம்மண்டலமும் கொண்டருளிய கிருஷ்ணதேவ மகாராயர் பிரிதிவிராஜ்ஜியம் பண்ணியருளிய நின்ற

2 சகாற்தம் 1448 அன் மேல் செல்லாநின்ற வெய வருத்து மிதுனநாயற்று பூறுவ பக்ஷத்து திறியோதரியும் சோமவாரம் பெற்ற திருவோணத்துநாள் செயங்கொண்ட சோழ மண்டலத்து வெண்குண்றக் கோட்ட பெருநகர் நாட்டு ஆதிப்பற்று உரதி சீர்மை அத்தியான கிருஷ்ண ராயபுரத்தில் எதிரிலி சோழ சோழீஸ்வரமுடைய நாயனார் கோயில் தான தாரும் எதிரிலிச் சோழ விண்ணகரம்பெருமாள் கோயில் தானதாரும் இந்த இரண்டு கோயில் மாடாபத்தியம் செய்வார் ஆணையார் நயினாரும் இக்கோயில் ஸ்ரீ கார்யம் செய்வார் பாலசிக்ஷ தப்பரைசையனும் ஆக இவ்வனைவரோம்

3 எம்மில் பொருந்தி கலவை பற்றி சத்திறபாடி பாராப்புத் திம்மு நாயக்கர் புத்திரர் திம்முநாயக்கற்கு இந்த இரண்டு கோயில் திருமேனி காவல் காணி ஆக்ஷி சுதந்திரம் பண்ணி கொடுத்தபடி அத்தி உடையவற்கும் பெருமாளுக்கும் சறுவ மானியமாக பண்ணிக் கொள்ள வேண்டி அடைப்பத்து வையப்ப நாயக்கருக்கும் பொத்து நாயக்கருக்கும் திம்மு நாயக்கர் ஆளும் ஓலையும் கூட்டி மாடா பத்தியம் ஆணையார் நாயனாருக்கு சம்பண சாரியும் வாசல் வெச்சதுக்கு பொன்னும் கொடுத்து அனுப்புகையில் இது முன்னிலையாக சுவாமி

4 கிருஷ்ணதேவ மகாராயர் பாதம் கண்டு கிருஷ்ணவேணி கரையிலே உடையவருக்கும் பெருமாளுக்கும் அத்தி சறுவ மானியம் பண்ணிக் கொண்டு வருகையில் பெருநகரில் செமத் தடையாய் இருந்த தேவர்களையும் தேவ காரியங்களையும் தம்முடைய தன்மமாக எழுந்தருளப் பண்ண நவபிரதிஷ்டை பண்ணி வைக்கையில் இந்த இரண்டு கோயில் திருமேனி காவல் காணி ஆட்சி சுதந்திரமும் தலைவாசல் காத்தறை வாசலும் விசு முத்திரையும் சேமும் தெய்வராஜ்யமும் மற்றும் உண்டான பண்டி பண்டாரமும் சந்திரா ஆதித்தன் வரையும் காத்துக்கொண்டு கோயில் சுதந்திரம் உண்டானதுக்கு உடையவர் கோயிலுக்கு

5 தானத்தார் நாலு பங்கும் மாடாபத்தியம் ஆணையன் நயிநார் ஒரு பங்கும் தாம் ஒரு பங்கும் ஆக ஆறு பங்கு ஆகவும் பெருமாள் கோயிலுக்கு தானத்தார் இரண்டு பங்கும் மாட பத்தியம் ஆணையர் நயினார் ஒரு பங்கும் தாம் ஒரு பங்கும் ஆக நாலு பங்கு ஆகவும் வந்த லாபலொபம் உண்டானதும் இந்த பங்கு விழுக்காட்டிலே அனுபவித்து கொள்ளக் கடைவோம் ஆகவும் இதுக்கு திருமேனி காவல்காணி ஆட்சிக்கு தமக்கு பண்ணி கொடுத்த கட்டளை பெருமாள் கோவில் சன்னதி எல்லை

6 வட சிறகில் நாரசத்துக்கு மேற்கு தேவதானத்தில் மனை இரண்டும் திருவிடை ஆட்டத்தில் மனை ஒன்றும் ஆக மனை மூன்றுக்கு அடி 90ம் உடையவர் கோயில் திருமேனி காவலுக்கு விட்ட மானியத்தில் தேவதானத்தில் ஏரிக்கு கீழே நஞ்சை பற்று பெரு செறு கஉ குழி உளங ய. மேலை கரும்பன் குழி ரு பஞ்ச பதறி இல் ஆற்றங்கரையில் குழி ...... பெருமாள் கோவில் திருமேனி காவலுக்கு வீட்டு மானியம் திருவிடையாட்டம் அதில் ஏரிக்கு கீழே

7 நஞ்சைப்பற்றில் வட்டம் குழி இப்புஞ்சைபற்று வாள் வாங்கினான் தாக்கில் குழி .... 18 அடி கோலால் நஞ்சை புஞ்சயில் குழி ஆயிரமும் சந்திரன் ஆதித்த வரையில் அனுபவித்துக் கொள்ள கடைய வராகவும் இந்தக் கோயில் வாயில்களுக்கு ராசிய தெய்வீகமாக எந்த காரியம் வந்தது உண்டானாலும் நாங்கள் தாமும் ஆக ஏறின மண்டலம் மண்டலமும் ஏறி உத்திரம் சொல்லி நிர்வகிக்க கொள்ள கடைவோமாகவும் இந்தத் திருமேனி காவல் காணி ஆட்சி இவருக்கு

8 விற்று ஒற்றை பிரிதி கிரைய தாய தாளதள்மங்களுக்கும் மற்றும் எப்பேர்பட்ட சகலப்பிறத்திகளுக்கும் வரித்தகடைவதாகவும் இதுக்கு எங்களுக்குள்ளே யாரோ ஒருத்தர் அகிதம் நினைத்த பேர் உண்டானால் இந்த கோயில் பண்டாரத்துக்கு துரோகியுமாய் காணி ஆட்சி தாமும் விட்டுப்போகக்கடைவதாகவும் இப்பிரமாணம் கல்வெட்டினதுக்கு எழுத்துப்பிழை வாசகப் பழுது வரி மாறாட்டம் மற்றும் எப்பேர்ப்பட்ட தோஷங்களும் சொல்ல பிறதாகவும்

9 பிறவும் பிறத்தியிலே யாரொருவர் அகிதம் சொன்ன பேர் உண்டானால் கங்கை கரையில் காராம் பசுவை கொன்ற தோஷத்தில் போக கடவர் இப்படிக்கு சந்திரறாதித்த வரையும் அனுபவித்து சுகத்திலேயே இருக்கவும் இவை திருவேகம்பபட்டர் எழுத்து உ இவை தில்லைக்கூத்தன் பட்டர் எழுத்து உ

10 இவை காமகோடி பட்டர் எழுத்து இவை திருச்சிற்றம்பல பட்டர் எழுத்து இவை பெருமாள் கோயில் தானத்தார் வெண்ணை கூத்தர் சிங்கப்பெருமாள் எழுத்து உ

11 இவை மாடாதிபத்தியம் ஆணையர் நயினார் எழுத்து இவர்கள் சொல்ல எழுதின மைக்கு கோயில் கணக்கு பெருநகர் நாட்டு பிரம்மராயன் எழுத்து உ

கல்வெட்டு எண் 4

1. அரசு சோழர்
2. அரசன்
3. ஆட்சியாண்டு
4. வரலாற்று ஆண்டு
5. இ.க.ஆண்டறிக்கை 300/1912
6. முன்பதிப்பு தெ.இ.க மடலம் 38. பக்கம் 351
7. இடம் அகத்தீஸ்வரர் கோயில் மேற்கு சுவர்.
8. குறிப்புரை அழகிய சோழன் என்பவர் அத்தி, ஆளப்பிறந்தான் ஆகிய ஊர்களுக்கும் தானம் செய்த தகவல்.

கல்வெட்டுப் பாடம்

1. அழகியசோழன்
2. பிரபவ வருடம் சித்திரை மாதம் 5 அத்தி ஆளப்பிறந்தானந் இந்த இரண்டு ஊருக்கு ம் பள்ளகள் சங்கீதம் பூமி தோனின
3. னாள் முதல் சந்திரன் ஆதித்த வரைக்கும் எல்லை யிதுக்கு ஆராகிலும் யிரண்டு நின்சால் கெங்கைககரையிலே
4. காராம் பசுவை கொன்ற தோஷத்தில் போக கடவன்

கல்வெட்டு எண் 5

1. அரசு :சோழர்
2. அரசன் : விஜய கண்ட கோபாலன்
3. ஆட்சியாண்டு : 10
4. வரலாற்று ஆண்டு : பொ.ஆ. 1259
5. இ.க.ஆண்டறிக்கை : 303/1912
6. முன்பதிப்பு : தெ.இ.க மடலம் 38. பக்கம் 354
7. இடம் அருள்மிகு கரியமாணிக்க பெருமாள் கோயில் தெற்கு சுவர்.
8. குறிப்புரை : வெண்ணைகாடியருளின பிள்ளை (கிருஷ்ணன்) கோயிலுக்கு பெரியநல்லூர் கிராமத்தில் 3 வேலி நிலம் சில வரிகளுடன் திருநத்தப்பெருமாள் என்பவருக்கு திருவிடையாட்டமாக விடப்பட்டது.

கல்வெட்டுப் பாடம்

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீவிஜயகண்ட கோபாலதேவற்கு யாண்டு பதினெட்டாவது ஆடி மாதம் முதல் ஆளப்பிறந்தானான இராசராச சம்புவராயனேன் வெ
2. ண் குன்றக் கோட்டத்து அத்தியில் எதிரிலி சோழ விண்ணகர் எம்பெருமான் திருமுற்றத்து அம்மை நாச்சியான பாலாற்றில் வென்றார் உகந்தருளி வித்த வெண்ணைக் காடியரு
3. ளின பிள்ளைக்கு காலியூர் கோட்டத்து பெரிய நல்லூரில் ஆற்றுக்கால் நாயனார் திருநட்டப்பெருமாள் திருத்தின நிலம் உட்பட கண்டஞ்சேர் மூன்று வேலி நிலம்பொன் வ
4. ரி காசு கடமை உள்ளிட்ட காசாயங்களும் ஆயமும் வெட்டி தனியாளும் எடுத்துக் கொட்டி உள்ளிட்ட நெல்லாயங்களும் உட்பட இவற்கு திருவிடை யாட்டமாக விட்டொ
5. ம் இந்நாள் முதல் ஆளமஞ்சி தேவை உட்பட இக்கோயில் தானத்தார்க்கெற கடமைகுடிமை பொக்கறுப்பதே

கல்வெட்டு எண் 6

1. அரசு : விஜயநகரபேரரசு
2. அரசன் : கிருஷ்ணதேவராயர்
3. ஆட்சியாண்டு :
4. வரலாற்று ஆண்டு : பொ.ஆ. 1525
5. இ.க.ஆண்டறிக்கை : 301/1912
6. முன்பதிப்பு : தெ. இ.க மடலம் 38. பக்கம் 352.
7. இடம் : அகத்தீஸ்வரர் கோயில் தெற்கு சுவர்.
8. குறிப்புரை : இக்கல்வெட்டு அத்தி (எ) கேளராந்தகபெருநகரத்தில் உள்ள எதிரிலிசோழிஸ்வமுடைய நாயனாருக்கு மடிப்பாக்கம் என்ற கிராமம் தேவதானமாக விடப்பட்டதும் இவ்வூரின் பெயர் அத்திப்பற்று என்கிற கிருஷ்ணராயபுரம் என்று குறிப்பிடுகிறது.

கல்வெட்டுப் பாடம்

1. சுபமஸ்து ஸ்ரீ
2 மஹாமண்டலேஸ்
3. வர மெதி
4. மீசுரர் கண்ட கட்
5. டாரி சாளுவ கிருஷ்ணதேவ
6. மகாராயர் பிறிதிவிரா
7. ச்சியம் பண்ணியரு
8. ளா நின்ற செராத்தம்
9 1447 க்கு மேல்
10. செல்லா நின்ற தாரு
11. ணி வருடம் மாசி மாதம் உயரு நாள்
12. சோமவாரமும் உத்தி
13. ராட்டதிநாள் கிருஷ்ணதேவரா
14. யர் புரமான அத்தி பற்
15. றில் அத்தியான கேரளாந்
16. தபெருநகரத்தில் திகமம் பெ
17. ருமால் காம மடிப்பாக்கத்தி
18. ல் நஞ்சைப்பற்றில்.....
19. எதிரிலி சோழ சோளிஷ்வ
20. ரர் முடைய நயினாருக்கு தே
21. வஸயிரனம் பண்ணின.
22. தம்மஸாதனம் இந்த தம்
23. மத்துக்கு யாதொருவர் அஹி
24. தம் பண்ணினவனுண்டா
25. னால் கெங்கை கரையில்
26. காராம் பசுவைக் கொன்
27.ற பாவத்திலே போகக
28. டைவனாகவும்



கல்வெட்டு எண் 7

1. அரசு : சோழர்
2. அரசன் : விஜய கண்ட கோபாலன்
3. ஆட்சியாண்டு : 10
4. வரலாற்று ஆண்டு : பொ.ஆ. 1259
5. இ.க.ஆண்டறிக்கை : 302 / 1912
6. முன்பதிப்பு : தெ.இ.க மடலம் 38. பக்கம் 353
7. இடம் : கரியமாணிக்க பெருமாள் கோயில் தெற்கு சுவர்.

8. குறிப்புரை: எதிரிலிசோழ விண்ணகர் கோயில் சரிசெய்வதற்காக ராஜராஜ சம்புவராயர் என்ற சிற்றரசன் பல வரிகள் விதித்து வெண்குன்றக் கோட்டத்தில் உள்ள பெரிய வேளிய நல்லூரில் 4000 குழி நிலத்தை தானம் திருவிடையாட்டமாக அளித்த தகவல்.

கல்வெட்டுப் பாடம்

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ விஜய கோபால தேவருக்கு யாண்டு எட்டாவது வெண்குன்றக் கோட்டத்து அத்தியில் எதிரில் சோழ விண்ணகர் எம்பெ

2. ருமானுக்கு பிள்ளையார் இராசராச சம்புவராயர் காளியூர் கோட்டத்து பெரியநல்லூரில் திருவிடை யாட்டமாக விட்ட தெற்கில் ஏரியில் எழுபதின் கல வரிசைப் பற்றி

3 ல் தொட்ட செரு குழி நானூற்று ஒருபத்து இரண்டும் பொன்மாறி குழி நானூற்றி இருப்த்து எட்டும் சடைச்சி குழி முன்னூற்று முப்பதேகாலும் திருவரங்கன்

4 குழி நானூற்று முப்பத்துநாலும் நங்கனிச் செறு குழி முன்னூற்று ஒரு பத்து எட்டரையே அரைக்காலும் செருவன் குழி நூற்று முப்பதும் புலிவலவன் தடி இரண்டினா

5 ல் குழி நானூற்று இருபத்திரண்டே காலும் அ பையதானி குழி இருநூற்றிருபத்தொன்பதே அரைக்காலும் செப்பு செறு குழி அறுநூற்று நாற்பத்து மூன்றும் மேற்படி குண்டில் குழி எ

6 ழுபதும் மல்லடி வட்டம் குழி ஐந்நூற்று தொண்ணூற்று மூன்றும் ஆகக் குழி நாலாயிரமும் பாடி காவல் நிக்கி அனைத்து நெல்லாயமும் காசாயங்களும் தரத்தில் வரும் காசு கடமையும் உட்பட திருவி

7 டையாட்டமாக விட்டோம் இந்நாள் முதல் இத்திருமுற்றம் ஜீரணித்துக் கிடந்தபடியாலே இத்திருப்பணி செய்ய வெண்டுகையில் இச்சிராம பட்டன் உள்ளிட்டார்க்கே காணியாக

8 கொடுத்தோம் இந்நாள் முதல் இதுகளுக்கு எற கடமை குடிமை பொக்க

கல்வெட்டு எண் 8

1. அரசு : சோழர்
2. அரசன்: :
3. ஆட்சியாண்டு :
4. வரலாற்று ஆண்டு: பொ.ஆ.
5. இ.க.ஆண்டறிக்கை: 304/1912
6 முன்பதிப்பு : தெ.இ க மடலம் 38. பக்கம் 355
7. இடம் : அருள்மிகு கரியமாணிக்க பெருமாள் கோயில் முன் பகுதி
8. குறிப்புரை :கரிய பெருமாள் கோயில் மகாமண்டபம், கிணறு, தேங்காய், கமுக தானம் அளித்த செய்தி.

கல்வெட்டுப் பாடம்

1. உ துன்மதி வருடம் வைகாசி ருஉ அத்தி
2. கரியபெருமாள் கோயில் மகா மண்
3. டபும் நடு பத்து பாத்தலும் கிணறும் தெ
4. ங்கும் கமுகும் செய் சென்னப்பன் உபயம் உ

கல்வெட்டு எண் : 9

1. அரசு : பல்லவர் (பிற்காலம்)
2. அரசன் : காடவராயர் கோப்பெருங்சிங்கன்.
3. ஆட்சியாண்டு :
4. வரலாற்று ஆண்டு : பொ.ஆ.
5. இ.க.ஆண்டறிக்கை : 296/1912
6. முன்பதிப்பு : தென்னிந்திய கல்வெட்டு மடலம் 12, பக்கம் 62.
7. இடம் : அருள்மிகு அகத்தீஸ்வரர் கோயில் தெற்குப்பகுதி
8. குறிப்புரை : இக்கல்வெட்டு பாடல் கல்வெட்டாக அமைந்துள்ளது. இப்பாடல்கூடல் ஆளப்பிறந்தாரான காடவராயர் மகனார் தொண்டைமண்டலம் கொண்ட பல்லவாண்டாரான காடவராயர் பற்றியவை. இவர் பிற்காலப் பல்லவர் மரபினர். காடவராயர் ஆட்சியை ஏற்றுக் கொள்ளாத மன்னர் எவருமில்லை. அவர் சேவூர்ப் போரில் வென்றவர். உலகு எங்கும் அவர் செங்கோல் நடக்கிறது. வெற்றித்தூண் பல நிறுவியவர். அவருக்குப் பெண்ணை நாடுடையான், வடவேங்கட வெற்பன், கச்சிப் பல்லவன் என்ற பட்டங்கள் உண்டு என்ற குறிப்புகள் கொண்ட கல்வெட்டு.

கல்வெட்டுப்பாடம் (பாடல் வடிவல்)

ஸ்வஸ்திஸ்ரீ கூடல் ஆளப்பிறந்தவரான காடவராயர் மகனார் தொண்டை மண்டலங்ளாண்ட பல்லவாண்டாரான காடவராயர் கல்வெட்டு

தங்கொ நகர்பெற தம்பு விதாம்பெறத் தாள் வணங்கிய
செங்கோல் வளைக்கை யரிவையரோடும் அடியுங் கையும்
பங்கெரு கம்அன்ன பல்லவன் காடவன் பார்முழுதான்
எங்கொன் அனுமத தொளில் இடா மன்னர் எம் மன்னரே (1)

பொரு திக்கிலுஞ் சென்று போர்வென்ற பல்லவன் காடவர்கோன்
கருதிப் போர்சென்று சேவூ ரினில்திருக் கண்சிவக்கப்
பருதிக்கு மேலு உயர்பிணக் குன்றில் பரந்திமிழ்ந்த
குருதிப் புனல்தொண்டை நன்னா டடங்கலுங் கொண்டதுவே (2)

கூராழி ஏந்திய பல்லவற் குக்கூடல் மன்னவற்குப்
பாராழி சூழ்ந் இசைபரிக் குப்பந்தி பண்டடைத்த
நீராழி வேழங்கள் நீராடும் மாமடு நின்ற கொற்றப்
பேராழி வெற்பிவன் செங்கோல் நடக்கும் பெரு வழியே (3)

தொழிதியலா மன்னர் தொண்டைத் திருநாடு கொண்டவருர்
கழுதிய லக்கண்ட காடவன் பல்லவன் காசினி மேல்
பழுதிய லாத்தனிச் செங்கோல் நடாத்திப் பராகரமஞ் சென்று
எழுதிய தூணங்கள் எண்டிசை சூழ்ந்த எழுகிரியே (4)

கைம்மலை வெள்ள கடற்படை பல்லவன் காடவர்தம்
செம்மலை வந்து பணியா வட மன்னர் சேனை விட்டு
தம்மலை விட்டுப் புறமலை வேலித் தளத்துலிஞ்சாது
எம்மலை எச்சுரத் துப்புகு வார் புக் கிருப்பதற்கே (5)

வண்டற் புனற்பெண்ணை நாடுடை யான்வடவேங்கடவெற்பன்
தொண்டைத்திருநாடு தோல் வலியால்கொண்ட தொண்டைமன்னன்
கண்டற கடற்கச்சிப் பல்லவன் காடவன் காரிருளிற்
பண்டப் பிரமவர்க்கு அன்பிலாப் பொற்ப தாம்புயனே (6)

இக்கல்வெட்டழிப்பான் தன் வம்சத்துத் தன் பிதாவுக்குப் பிறவா தான் .

(நன்றி – தமிழ்க்கல்வெட்டுப் பாடல்கள்- செ. இராசு, பக்கம் எண் 140,141.)

10. திருவிழாக்கள்

வைகாசி: வைகாசி மாதம் விசாக நட்சத்திரத்தில் பெருநகர் கிராமத்தில் செய்யாறு ஆற்றில் கரியமாணிக்கபெருமாள் எழுந்தருள்கின்றார் .அவ்வமையம் பெருநகர் கிராமம் சுற்றிலும் உள்ள பதினைந்து கிராமங்களில் இருந்து பெருமாள் உற்சவர்கள் எழுந்தருள்கின்றார்கள்.

ஆடி : ஆடி மாதத்தில் கிராம தேவதை அருள்மிகு மத்தியம்மன்,இடைக்காத்த அம்மன் ,காளியம்மன் முதலிய தெய்வங்களுக்கு கூழ்வார்த்தும் பொங்கல் வைத்து கொண்டாடுகின்றனர் ஆடி கிருத்திகை தினத்தில் மலை மீது அமைந்துள்ள முருகர் கோவில் சிறப்பு வழிபாடு மற்றும் சில நேர்த்திகடனாக காவடி எடுத்தல் போன்றவை நடைபெறுகின்றன

புரட்டாசி : புரட்டாசி மாதம் அனைத்து சனிக்கிழமைகளில் பெருமாள் கோவிலில் சிறப்பு வழிபாடுகள் மற்றும் திருமணஉற்சவங்கள் வீதி உலா நடைபெறுகின்றது.

மார்கழி : மார்கழி மாதத்தில் திருப்பாவை உற்சவம் பஜனை வீதி வலம்.
தை : பூசம் தினத்தில் அருள்மிகு அகத்தீஸ்வரர் பெருநகர் கிராமம் செய்யாற்றுபடுகையில் நடைபெறும் ஆற்றுத்திருவிழாவில் எழுந்தருள்கின்றார். அவ்வமயம் இருபது கிராமத்தை சேர்ந்த சிவாலய உற்சவமூர்த்திகள் செய்யாறு ஆற்றில் எழுந்தருளி உற்சவம் நடைபெறுகிறது

தொல்லியல் சின்னங்கள்

1. குகைத்தளங்கள்

அத்தி கிராமத்தின் மலைமீது சமணப் படுக்கைகள் மற்றும் குகை போன்ற அமைப்பு காணப்படுகின்றன. அப்பகுதிக்குச் செல்ல படிக்கட்டுகள் போன்ற அமைப்பில் பாறைகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

2. இவ்வூரிலுள்ள எட்டி அம்மன் ஆலயத்தின்பாறையில் காளையின் தலை சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது.

அத்தி மலைக்கோயில்

12. நாட்டுப்புற கோயில்கள்

1. அருள்மிகு மத்தியம்மன் கோவில்

இந்த கோவில் ஊர் எல்லைப் புறத்தே அமைந்துள்ளது இந்த ஆலயத்தில் உள்ள அம்மன் கிராம தேவதையாக வணங்கப்படுகிறார். பரிவார தெய்வமாக மதுரை வீரன் தெய்வத்தைத் அமைத்துள்ளார்கள்.

2 அருள்மிகு எட்டியம்மன் ஆலயம்.

இந்த கோவில் ஊரின் புறத்தே அமைந்துள்ளது எட்டியம்மன் என்ற சிறு தெய்வம் சிறு பாறை மீது அமைந்துள்ளது இந்த அம்மனின் கீழே உள்ள பாறையில் காளையின் தலை சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது.

3. இடை காத்த அம்மன் ஆலயம்

இந்த ஆலயத்தில் 7 சப்த மாதர் சிலைகளாக அமைந்துள்ளனர். அய்யனார் சிலையும் உள்ளது. மேற்குறிப்பிட்ட எட்டியம்மன் மத்திய அம்மன் ஆகியோர் இந்த அம்மனின் உடன்பிறப்புகள் ஆக சகோதரிகளாக ஊர்மக்கள் வணங்கப்படுகிறார்கள். மத்தி அம்மன், இடை காத்த அம்மன் போன்ற சொற்றொடர்கள் புதிதாக உள்ளன இருப்பினும் இந்த இரு சொற்கள் ஒரு பொருள் படும் பெயர்களாக விளங்குகின்றன. (மத்தி - இடை) ஊர் வழக்கத்தில் ஆடி மாத அம்மன் வழிபாட்டில் கிராம தேவதை மத்தி அம்மனுக்கு பொங்கல் வைத்து பின்னர் அந்த அம்மனின் சகோதரி களாக விளங்கும் இடை காத்த அம்மன் ,எட்டியம்மன் போன்றோருக்கும் சேர்த்து பொங்கல் பானைகளை தனித்தனியே வைத்து வணங்கப்படுகிறார்கள்.

4 அருள்மிகு முனீஸ்வரன் ஆலயம்.

முனீஸ்வரர் ஆலயம் குலதெய்வ வழிபாட்டின் ஒரு குழுவினர் வணங்கப்படும் தெய்வமாக வழங்கப்படுகிறது.

5 பைரவர் கோயில்

பைரவர் சிற்பமானது ஆற்றங்கரையில் ஊரின் வெளிப்புறத்தில் வேப்ப மரத்தடியில்அமைந்துள்ளது. இந்த சிற்பம் சிவன் கோவிலில் இருந்து கால சூழ்நிலை மாற்றத்தால் இடம்பெயர்ந்து இருக்கலாம். ஆனால் இவ்விடத்தில் கோவில் இருந்ததற்கான தடயங்கள் இல்லை.

13. நீங்கா நினைவுகள்

இவ்வூரில் 1962 மற்றும் 1977 ஆண்டுகளில் செய்யாற்றில் ஏற்பட்ட வெள்ளத்தினால் பயிர்கள் சேதமடைந்தது. 1990 ல் காலரா நோய்தொற்று ஏற்பட்டு பொதுமக்கள் பாதிப்படைந்தனர்.

14. ஊரைச்சுற்றி

காழியூர் : மேற்கு திசையில் காழியூர் என்ற கிராமம் அமைந்துள்ளது. சோழப் பேரரசு ஆட்சியில் இவ்வூர் ஆனது ஜெயங்கொண்ட சோழ மண்டலத்தின் கீழ் உள்ள ஒரு வருவாய் கோட்டமாக விளங்கியது. அக்காலத்தில் இவ்வூரின் பெயர் காலியூர் கோட்டம் என்று கல்வெட்டுகளில் வழங்கிவருகின்றது. சிவன் மற்றும் பெருமாள் கோவில் உள்ளன. பெருமாள் அழகிய சிற்ப வேலைப்பாடுகள் அமைந்துள்ளன .சிவாலயத்தில் தென்புறத்தில் கல்வெட்டுகள் உள்ளன.

பெரிய வேளிய நல்லூர்: அத்தி கிராமத்தின் மேற்கு திசையில் அமைந்துள்ளது. இந்த ஊரின் சிறு குன்றின் மீது சிவாலயம் அமைந்துள்ளது சிவனின் பெயர் மகாதேவர் என்று அழைக்கப்படுகிறார்.குன்றின்மீது உள்ள பாறையில் ராஜராஜ சோழனின் கல்வெட்டுகள் உள்ளன. இந்த கிராமத்தில் வைணவக்கோவில் ,சமணர் கோவில் உள்ளது. இந்த கிராமத்திற்கு வழங்கிய நில தானங்களை பற்றி அத்தி கிராமத்தில் உள்ள சிவன்கோவில் கல்வெட்டுகள் கூறுகின்றன.

மடிப்பாக்கம் : வடக்கு திசையில் மடிப்பாக்கம் என்ற கிராமம் அமைந்துள்ளது. இந்த கிராமத்தில் கற்றளிகளால் உருவாக்கப்பட்ட மண்டபங்கள் , சிற்பங்கள்,ஆலயங்கள் அமைந்துள்ளன. இவ்வூரில் திருவண்ணாமலை மாவட்ட வரலாற்று ஆய்வு நடுவத்தினர் புதியதாக இரண்டு கல்வெட்டுகளை கண்டறிந்து பதிவுசெய்தனர்.

கீழ்நீர்குன்றம் : கிழக்கு திசையில் கீழ்நீர்குன்றம் மற்றும் இளநீர் குன்றம் கிராமம் அமைந்துள்ளது.இளநீர் குன்றம் கிராமத்தில் ஊர் நடுவே எல்லையம்மன் ஆலயம் அமைந்துள்ளது.

வடஆளப்பிறந்தான் : தென் திசையில் வட ஆளப்பிறந்தான் மற்றும் புதூர் என்ற கிராமங்கள் அமைந்துள்ளது இவ்வூரின் சிறு குன்றின் மீது முருகர் ஆலயம் , மற்றொரு .மலைமீது அம்மன் கோவில் அமைந்துள்ளது. ஆளப்பிறந்தான் என்ற பெயரானது சம்புவராய மன்னர்களில் விருது பெயர்களில் ஒன்றாகும் அம்மன்னனின் ஆட்சியில் நிலத்தை தானமாக வழங்கியமையால் இப்பெயர் பெற்றுள்ளது.

துணைபுரிந்தவை

1. தென்னிந்திய கல்வெட்டு தொகுதி, 36,

நன்றி-

ஊர் தகவல் :
1.திரு.திருமால் ஆசிரியர் (ஓய்வு)

2.திரு.பட்டாபிராமன்

3. திரு.கு.பார்த்தீபன் ஆசிரியர்.

4. திரு. லோகநாதன், அத்தி

5. திரு.க.விநாயகம் ,
ஆலய அறங்காவலர் ,
அருள்மிகு அகத்தீசுவரர் ஆலயம், அத்தி..

புகைப்பட உதவி
1.திரு.பாபு மனோ ,காஞ்சிபுரம்.
2.சந்தோஷ் , செய்யாறு.



அ. லோகேஷ் குமார்

திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறில் வசித்து வருகின்றேன். தனியார் கல்லூரியில் துணைப் பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன்.சிறு வயதில் இருந்தே பழங்கால பொருட்கள் மற்றும் வரலாற்றின் மீது ஆர்வம் அதிகமாக இருந்தது.அந்த வகையில் முதல் முறையாக ஊர் வரலாறு எழுதும் வாய்ப்பை பெற்றுள்ளேன்